1995 ஏப்ரல் 21]

அமைக்கப்பட இருக்கிற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆருடைய அருங்காட்சியகத்திலே புரட்சித் தலைவருடைய சிலை வைக்கப்படும். புரட்சித் தலைவரே தங்க மனம் கொண்டவர். ஆகவே எந்தச் சிலையாக இருந்தாலும் அது தங்கச் சிலையாகத்தான் கருதப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண். 395, டாக்டர் ஆ.வெ. புருஷோத்தமன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.*

395—

ஆரம்பப்பள்ளிகளில் ஆசிரியர் பணியிடங்களை நிரப்புதல்

**33379—டாக்டர் ஆ.வெ. புருஷோத்தமன்:*

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதியில் ஆரம்பப் பள்ளிகளில் ஆசிரியர் பணி இடங்கள் சுமார் 60 காலி இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) காலி இடங்களை நிரப்ப எப்பொழுது நடவடிக்கை எடுக்கப்படும்?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசு அறியும்.

(ஆ) விரைவில் ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 10–55

டாக்டர் ஆ.வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பெண்ணாகரம் தொகுதியில், இந்தக் கேள்வி எழுப்பப்படும் போது 60 காலி இடங்கள் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இன்றைக்கு அங்கே நூற்றுக் கணக்கிற்கு மேல் காலி இடங்கள் உள்ளன. என்னுடைய பகுதி மிகவும் மலைப்பாங்கான பகுதி. மிகவும் பின் தங்கிய பகுதி. அங்கு ஆசிரியர்கள் வந்து வேலை செய்வதற்குக் கூட அஞ்சுகின்ற ஒரு மலைப் பாங்கான பகுதி. போக்குவரத்து வசதியில்லாத பகுதி. ஆகவே அப்படிப்பட்ட பகுதிகளுக்கு ஆசிரியர்களை நியமனம் செய்யும்போது அந்தப் பகுதியில் உள்ளவர்களுக்கு, அல்லது

அந்தப்பகுதியில் உள்ள மாவட்டத்தில் உள்ளவர்களுக்கு முன் உரிமை அமைச்சர் அளிப்பாரா, அல்லது வேறு பகுதியில் உள்ளவர்களைப் பணி அமர்த்தும்போது, அவர்கள் கூடிய விரைவில் மாறுதல் பெற்றுக் செல்வதைத் தடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் தேர்வு தொடர்பாக நீதிமன்றத்திலே ஒரு வழக்கு இருந்தது. பின்னர் 69 சதவீத இட ஒதுக்கீடு தொடர்பான பிரச்சினையும் எழுந்தது. எனவே மூன்று ஆண்டுகளாக ஆசிரியர்கள் தேர்வு நடைபெறவில்லை. எனவேதான் ஆசிரியர்கள் காலி இடங்கள் அதிகரித்து வந்திருக்கிறது எனபதை அரசு உணர்ந்து இருக்கிறது. தற்போது ஆசிரியர் தேர்வு வாரியம் 8,000 இடைநிலை ஆசிரியர்களைத் தேர்ந்து எடுக்கும் பணியைத் தொடங்கியிருக்கிறது. தேர்ந்து எடுக்கப்பட்ட ஆசிரியர்களின் பட்டியல் அடிப்படையில் வரும் ஜுன் மாதத்தில் காலி பணியிடங்கள் நிரப்பப்படும். அப்படி நிரப்பப்படுகிறபொழுது எல்லா மாவட்டங்களிலும் அந்தந்த மாவட்டத்திற்கு சொந்தக்காரர்களையேதான் அந்தந்த மாவட்டங்களிலே பணி அமர்த்த வேண்டும் என்று அரசு ஆணையிட்டிருக்கிறது. தர்மபுரி, நீலகிரி மற்றும் மலைப்பிரதேசங்களைப் பொறுத்தவரை அந்தந்தப் பகுதியிலேயே வாழ்பவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவர்களை அங்கே தான் பணி அமர்த்த வேண்டும் என்றும் அரசு ஆணையிட்டிருக்கிறது. வெளியிலேயிருந்து அங்கே வேறு காரணங்களுக்காக நியமிக்கப்படுபவர்கள் குறைந்தது 2 வருடங்களுக்கு அங்கே பணி ஆற்றிய பின்னர்தான் அங்கிருந்து அவர்களுக்கு மாறுதல் தரப்படும் என்றும் அரசு முடிவு செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் ஆ.வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆரம்பப் பள்ளிகளிலே ஆண் ஆசிரியர்கள் நியமிக்கப்படும்பொழுது பல்வேறு சங்கடங்கள் காரணமாக அந்த ஆசிரியர்கள் பெரும்பாலான பகுதிகளுக்கு செல்வது இல்லை. ஆகவே அவர்கள் அப்படிப்பட்ட பகுதிகளுக்கு செல்லாத காரணத்தால் அந்தப் பகுதி மக்களுக்கு கல்வியினுடைய தரம் சிறந்ததாக இருப்பதற்கு வாய்ப்பில்லை. ஆகவே ஆரம்பப் பள்ளிகளுக்கு ஆசிரியர்களை நியமிக்கும்போது இப்படிப்பட்ட மலைப் பிரதேசங்களில் உள்ள

1995 ஏப்ரல் 21]

பகுதிகளுக்கு பெண் ஆசிரியர்களை நியமிப்பதில் முன் உரிமையைக் கொடுத்து அமைச்சர் அவர்கள் நியமிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1 முதல் 5 வகுப்புகள் வரை நியமிக்கப்படும் ஆசிரியர்கள் பெரும்பாலும் பெண்களாகவே இருக்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இப்படிப்பட்ட முடிவை எடுத்தது இல்லை. தமிழகத்திலே தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்படிப்பட்ட ஆணையிட்டிருக்கிறார்கள். ஆசிரியர்களை நியமிக்கும்போது கூடிய விரைவில் பெண் ஆசிரியர்கள் அந்தந்த இடங்களுக்கு, அந்தந்த பகுதியைச் சார்ந்தவர்களாகத்தான் நியமிக்கப்படுவார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 396, திரு. அ. பாப்பா சுந்தரம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

396.—

தோகைமலை உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்

*35693—**திரு. அ. பாப்பா சுந்தரம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், குளித்தலை தொகுதி, தோகைமலை ஒன்றியத்தில், தோகைமலை உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக இந்த ஆண்டில் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போதைக்கு அரசின் ஆய்வில் இல்லை.

திரு. அ. பாப்பா சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோகைமலை என்பது ஒரு தனி ஒன்றியம். கிட்டத் தட்ட